# PAPER-II
# TAMIL

**Signature and Name of Invigilator**

1. (Signature) __________________________

   (Name) ____________________________

2. (Signature) __________________________

   (Name) ____________________________

OMR Sheet No. : ...............................................
(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |
(In figures as per admission card)

Roll No.________________________________
(In words)

| J | A | 0 | 2 | 6 | 1 | 7 |
|---|---|---|---|---|---|---|

Time : **1 1/4** hours] [Maximum Marks : **100**

Number of Pages in this Booklet : **16** Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Test Booklet Number should be entered on the OMR Sheet and the OMR Sheet Number should be entered on this Test Booklet.
   (iv) The test booklet no. and OMR sheet no. should be same. In case of discrepancy in the number, the candidate should immediately report the matter to the invigilator for replacement of the Test Booklet / OMR Sheet.
4. Each item has four alternative responses marked (1), (2), (3) and (4). You have to darken the circle as indicated below on the correct response against each item.
   **Example :** ① ② ● ④
   where (3) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Booklet only.** If you mark your response at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means, such as change of response by scratching or using white fluid, you will render yourself liable to disqualification.
9. You have to return the Original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are, however, allowed to carry original question booklet on conclusion of examination.
10. **Use only Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. इस पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए ।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं ।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी । पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए पुस्तिका पर लगी कागज की सील को फाड़ लें । खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें ।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं । दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें । इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे । उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा ।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका का नंबर OMR पत्रक पर अंकित करें और OMR पत्रक का नंबर इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें ।
   (iv) प्रश्न पुस्तिका नं. और OMR पत्रक नं. समान होने चाहिए । यदि नंबर भिन्न हों, तो परीक्षार्थी प्रश्न-पुस्तिका / OMR पत्रक बदलने के लिए निरीक्षक को तुरंत सूचित करें ।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (1), (2), (3) तथा (4) दिये गये हैं । आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है :
   **उदाहरण** : ① ② ● ④
   जबकि (3) सही उत्तर है ।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पुस्तिका के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं । यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा ।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें ।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें ।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, जैसे कि अंकित किये गये उत्तर को मिटाना या सफेद स्याही से बदलना तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं ।
9. आपको परीक्षा समाप्त होने पर मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें । हालांकि आप परीक्षा समाप्ति पर मूल प्रश्न-पुस्तिका अपने साथ ले जा सकते हैं ।
10. **काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें ।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है ।**
12. **गलत उत्तरों के लिए कोई नकारात्मक अंक नहीं हैं ।**



www.examrace.com

## TAMIL
## தமிழ்
## Paper-II
## தாள்-II

**Note** : This paper contains **fifty (50)** objective type questions of **two (2)** marks each. All questions are compulsory. **(50 × 2 = 100)**

**குறிப்பு :** இந்த வினாத்தாள் **ஐம்பது** (50) விடைதெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய மதிப்பெண்கள் **இரண்டு** (2). அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **(50 × 2 = 100)**

**1.** புறநானூற்றுப் பெருந்திணைப் பாடல்களில் பாடப்பட்டோன்

(1) குமணன் (2) பேகன்

(3) காரி (4) அண்டிரன்

**2.** 'காமம் முதலிய குற்றங்களை வெட்டி வீழ்த்துவேன்' என நெடுமொழி வஞ்சி எனும் புறப்பொருள் நெறியில் பாடியவர்

(1) தாயுமானவர் (2) பட்டினத்தார்

(3) சிவப்பிரகாசர் (4) வள்ளலார்

**3.** மேற்பல்லும் கீழிதழும் இயையப் பிறப்பது

(1) வ (2) ய

(3) ல (4) ள

**4.** இடைச்சியார் என்பது

(1) உலா உறுப்பு (2) பரணி உறுப்பு

(3) கலம்பக உறுப்பு (4) குறவஞ்சி உறுப்பு

**5.** 'இடைப்புலத் தொழிந்த ஏந்து கோட்டியானை' என்பதில் இடைப்புலம் என்பது

(1) நெற்களம் (2) ஏர்க்களம்

(3) போர்க்களம் (4) இடைநிலம்



www.examrace.com

6. சங்கச் செய்யுள்களோடு ஒப்பு நோக்கத்தக்க சப்பானியப் பாடல்கள்

(1) ஹைகா (2) மன்யோசு
(3) ஹைக்கூ (4) டங்கா

7. குறங்கு செறி அணியப்படும் இடம்

(1) துடை (2) இடை
(3) தோள் (4) கழுத்து

8. பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு

(1) 1967 (2) 1972
(3) 1980 (4) 1978

9. 'நாம்' என்பது 'உளப்பாடு' எனக் குறித்த உரையாசிரியர்

(1) இளம்பூரணர் (2) நச்சினார்க்கினியர்
(3) சேனாவரையர் (4) தெய்வச்சிலையார்

10. ஆங்கிலத்தில் ரெயினால்ட்சு எழுதிய புதினங்களைத் தழுவிப் புதினங்கள் பல படைத்தவர்

(1) ராஜேஷ்குமார்
(2) ஆரணி குப்புசாமி முதலியார்
(3) தமிழ்வாணன்
(4) சுஜாதா

11. உயர்திணைப் பலர்பால் விகுதிகள்

(I) மார் (II) ப
(III) இர் (IV) ஆர்

இவற்றுள்,

(1) I, II, IV - சரி (2) I, II, III - சரி
(3) I, III, IV - சரி (4) II, III, IV - சரி



www.examrace.com

12. எச். ஏ. கிருஷ்ணப் பிள்ளையின் படைப்புக்களில் காணப்படுவன

I. தாயுமானவரின் செல்வாக்கு

II. கம்பரின் தாக்கம்

III. தேவாரத்தின் சாயல்

IV. ஆழ்வார் பாசுரங்களின் அமைப்பு

இவற்றுள்,

(1) I, II, III - சரி (2) I, II, IV - சரி

(3) I, III, IV - சரி (4) II, III, IV - சரி

13. வெண்பா யாப்பின

I. கைக்கிளை II. கலிப் பாட்டு

III. பரி பாட்டு IV. அங்கதப் பாட்டு

இவற்றுள்,

(1) I, III, IV - சரி (2) II, III, IV - சரி

(3) I, II, IV - சரி (4) I, II, III - சரி

14. பயனிலை உவம உருபுகள்

I. எள்ள II. மதிப்ப

III. கடுப்ப IV. கள்ள

இவற்றுள்,

(1) I, III, IV - சரி (2) II, III, IV - சரி

(3) I, II, III - சரி (4) I, II, IV - சரி

15. நிலவரி தண்டுவதற்காகவே முற்காலத்தில் நியமிக்கப்பட்டவர்கள்

I. ஜமீந்தார்கள் II. ஜாகிர்தாரர்கள்

III. மிட்டாதாரர்கள் IV. பட்டகாரர்கள்

இவற்றுள்,

(1) I, II, III - சரி (2) I, III, IV - சரி

(3) I, II, III, IV - சரி (4) I, II, IV - சரி



www.examrace.com

16. முன்னிலை அசைகள்

I. இக	II. இகும்

III. மதி	IV. சின்

இவற்றுள்,

(1) I, II, III - சரி	(2) I, III, IV - சரி

(3) I, II, IV - சரி	(4) I, II, III, IV - சரி

17. யகர உடம்படு மெய்

I. ஐ வழியது	II. உ வழியது

III. ஈ வழியது	IV. இ வழியது

இவற்றுள்,

(1) I, III, IV - சரி	(2) I, II, IV - சரி

(3) I, II, III - சரி	(4) I, II, III, IV - சரி

18. **<u>உறுதிக்கூற்று</u> (உ)** : 'பழமணல் மாற்றுமின், புதுமணல் பரப்புமின்' என்கிறது மணிமேகலை.

**<u>காரணம்</u> (கா)** : வெறியாட்டு நிகழ்வின் போது அவ்வாறு செய்வது மரபு.

(1) (உ) சரி; (கா) சரி

(2) (உ) சரி; (கா) சரியன்று

(3) (உ) சரியன்று; (கா) சரி

(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

19. **<u>உறுதிக்கூற்று</u> (உ)** : கர்நாடக இசை மேடைகளில் தெலுங்கு முதன்மை பெற்றுள்ளது.

**<u>காரணம்</u> (கா)** : விசயநகரப் பேரரசர்கள், நாயக்கர்கள் காலத்தில் அம்மொழி ஏற்றம் பெற்றது.

(1) (உ) சரியன்று; (கா) சரியன்று

(2) (உ) சரி; (கா) சரியன்று

(3) (உ) சரியன்று; (கா) சரி

(4) (உ) சரி; (கா) சரி



www.examrace.com

20. **உறுதிக்கூற்று (உ)** : 'யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்' எனவும் 'சமம் தாங்கவும்' எனவும் புறநானூற்றுப் பாடலடிகளில் யவனர், சமம் போன்ற சொற்கள் பயின்று வருகின்றன.

**காரணம் (கா)** : மொழி முதல் எழுத்துக்கள் பற்றிய தொல்காப்பிய விதிகள் அப்படியே சங்க இலக்கியங்களில் பின்பற்றப்பட்டுள்ளன.

(1) (உ) சரி; (கா) சரி (2) (உ) சரியன்று; (கா) சரி

(3) (உ) சரி; (கா) சரியன்று (4) (உ) சரியன்று; (கா) சரியன்று

21. **உறுதிக்கூற்று (உ)** : 'காமஞ் சான்ற ஞானப்பனுவல்' எனத் திருக்கோவையார் கூறப்படுவதுண்டு.

**காரணம் (கா)** : நாயக, நாயகி பாவம் அமைய, அது சைவ சமயக் கருத்துக்களை முன்வைக்கிறது.

(1) (உ) சரி; (கா) சரி (2) (உ) சரி; (கா) சரியன்று

(3) (உ) சரியன்று; (கா) சரி (4) (உ) சரியன்று; (கா) சரியன்று

22. **உறுதிக்கூற்று (உ)** : 'சமநிலையாகிய சாந்தத்தைத்' தொல்காப்பியர் ஒரு மெய்ப்பாடாகக் கூறவில்லை.

**காரணம் (கா)** : விகற்பம் பல கொண்ட உலகியல் வழக்கு அது.

(1) (உ) சரி; (கா) சரி (2) (உ) சரியன்று; (கா) சரியன்று

(3) (உ) சரி; (கா) சரியன்று (4) (உ) சரியன்று; (கா) சரி

23. **உறுதிக்கூற்று (உ)** : பாக்கள் சிலவற்றில் 'செம்பொருள் அங்கதம்' இடம் பெறுவதுண்டு.

**காரணம் (கா)** : தம்மை மதியாத புலவரைச் சாடிப் புலவர் சிலர் பாடுவர்

(1) (உ) சரி; (கா) சரி (2) (உ) சரி; (கா) சரியன்று

(3) (உ) சரியன்று; (கா) சரி (4) (உ) சரியன்று; (கா) சரியன்று

24. **உறுதிக்கூற்று (உ)** : ஒரு சொல்லே நான்கு சீருமாகி இரட்டைத் தொடையாய் வருவது உண்டு.

**காரணம் (கா)** : பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ எனச் சீர்கள் தொடுக்கப்படுவது உண்டு.

(1) (உ) சரியன்று; (கா) சரியன்று

(2) (உ) சரி; (கா) சரியன்று

(3) (உ) சரியன்று; (கா) சரி

(4) (உ) சரி; (கா) சரி



www.examrace.com

25. <u>உறுதிக்கூற்று</u> (உ) : அகப்பாடல்களில் மெய்ப்பாடு அமைய வாய்ப்பு மிகுதி.

<u>காரணம்</u> (கா) : சொற்கேட்டார்க்குப் பொருள் கண்கூடாக வேண்டுவது அப்பாடல்களின் அடிப்படை.

(1) (உ) சரி; (கா) சரி (2) (உ) சரி; (கா) சரியன்று

(3) (உ) சரியன்று; (கா) சரி (4) (உ) சரியன்று; (கா) சரியன்று

26. <u>உறுதிக்கூற்று</u> (உ) : இந்தியாவில் பல்வேறு மொழியினரும் சமசுகிருத வளர்ச்சிக்கு உதவியுள்ளனர்.

<u>காரணம்</u> (கா) : கோயிற் கலை குறித்த நூல்கள் சமசுகிருதத்தில் இருப்பினும் அந்நூல் நெறியில் கட்டப்பட்ட கோயில்கள் அனைத்தும் தென்னகத்திலேயே உள்ளன.

(1) (உ) சரியன்று; (கா) சரி

(2) (உ) சரி; (கா) சரியன்று

(3) (உ) சரியன்று; (கா) சரியன்று

(4) (உ) சரி; (கா) சரி

27. <u>உறுதிக்கூற்று</u> (உ) : பிரபந்த தீபிகை என்பது ஒரு நூலின் பெயர்.

<u>காரணம்</u> (கா) : பிரபந்தங்களுக்கெல்லாம் கொடுமுடியாகத் திகழ்வது அது.

(1) (உ) சரி; (கா) சரியன்று

(2) (உ) சரி; (கா) சரி

(3) (உ) சரியன்று; (கா) சரி

(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

28. <u>நிரல்படுத்துக.</u>

உவமப்போலி வரும் திறம் :

(A) பயம் (B) பிறப்பு

(C) வினை (D) உறுப்பு

(E) உரு

(1) ACEBD (2) BADEC

(3) CADEB (4) DACEB



www.examrace.com

**29.** <u>நிரல்படுத்துக.</u>

அழுகையின் நிலைக்களன்கள் :

(A) அசைவு (B) இழவு

(C) வறுமை (D) இளிவு

(1) ADCB (2) DBAC

(3) CDAB (4) BACD

**30.** <u>நிரல்படுத்துக (தொல்காப்பியப்படி).</u>

தொடை வகைகள் :

(A) இயைபு (B) முரண்

(C) எதுகை (D) மோனை

(1) ACBD (2) BDCA

(3) CABD (4) DCBA

**31.** <u>நிரல்படுத்துக.</u>

சமணர்தம் பஞ்சமந்திர எழுத்துக்கள் :

(A) ஸி (B) ஸா

(C) அ (D) ஆ

(E) உ

(1) ACEBD (2) BADEC

(3) CADEB (4) DACEB

**32.** <u>நிரல்படுத்துக (தொல்காப்பியத்தின்படி).</u>

களவில் கூற்று நிகழ்த்துவோர்:

(A) பார்ப்பான் (B) செவிலி

(C) தோழி (D) பாங்கன்

(E) கிழவன் (F) கிழத்தி

(1) ADCBFE (2) DABCEF

(3) CADBEF (4) BCDAEF



www.examrace.com

33. <u>நிரல்படுத்துக (தொல்காப்பியத்தின்படி).</u>
ஏகார இடைச் சொல்லின் பொருள் :

(A) தேற்றம் (B) எண்
(C) பிரிநிலை (D) வினா
(E) ஈற்றசை

(1) ADCBE (2) DACEB
(3) BDCAE (4) CBAED

34. <u>நிரல்படுத்துக.</u>
புல், மரம் இவற்றின் பொது உறுப்புக்கள் :

(A) பழம் (B) காய்
(C) வீழ் (D) தோல்
(E) செதின்

(1) CABED (2) BADEC
(3) ABCED (4) BACDE

35. <u>நிரல்படுத்துக.</u>
பசி செய்வனவாக மணிமேகலை கூறுவன :

(A) நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
(B) குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
(C) பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
(D) பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்

(1) BDAC (2) BDCA
(3) BCAD (4) BCDA

36. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | உடையர் | (I) | அந்தணர் |
| (B) | அறவோர் | (II) | மங்கலம் |
| (C) | இல்வாழ்க்கை | (III) | ஊக்கம் |
| (D) | மனைமாட்சி | (IV) | அறன் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | I | IV | III |
| (2) | IV | III | II | I |
| (3) | III | I | IV | II |
| (4) | III | II | I | IV |



www.examrace.com

**37.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | ஆதி விளக்கு | (I) | இடைநின்ற பொருள் முன்னும் பின்னும் நோக்குதல் |
| (B) | மத்திப தீபம் | (II) | முன்னொரு பொருள் கூறிப் பின்வருவதும் அதுபோலும் எனல் |
| (C) | இறுதி விளக்கு | (III) | சூத்திரத்தின் முதலில் அமைத்த பொருள் இறுதியளவும் ஓடுதல் |
| (D) | மாட்டெறிதல் | (IV) | கடைநின்ற பொருள் இடையும் முதலும் நோக்குதல் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | IV | III | I |
| (2) | IV | III | II | I |
| (3) | I | III | IV | II |
| (4) | III | I | IV | II |

**38.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | இன்னாமை வேண்டின் | (I) | அறம் செய்க |
| (B) | இந்நிலத்து மன்னுதல் வேண்டின் | (II) | வெகுளி விடுக |
| (C) | தன்னொடு செல்வது வேண்டின் | (III) | இசை நடுக |
| (D) | வெல்வது வேண்டின் | (IV) | இரவு எழுக |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | III | IV | I |
| (2) | IV | III | I | II |
| (3) | III | I | II | IV |
| (4) | III | IV | II | I |

**39.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | முனைவு | (I) | கவின் |
| (B) | எறுழ் | (II) | முனிவு |
| (C) | பழிச்சு | (III) | வலி |
| (D) | யாண் | (IV) | வாழ்த்து |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | III | IV | I |
| (2) | III | IV | I | II |
| (3) | IV | III | I | II |
| (4) | II | I | IV | III |



www.examrace.com

**40.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | கார்நாற்பது | (I) | பூதஞ்சேந்தனார் |
| (B) | களவழி நாற்பது | (II) | கபிலர் |
| (C) | இன்னா நாற்பது | (III) | பொய்கையார் |
| (D) | இனியவை நாற்பது | (IV) | கண்ணங் கூத்தனார் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | I | II | III |
| (2) | III | I | IV | II |
| (3) | IV | III | II | I |
| (4) | II | III | IV | I |

**41.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | இலக்கிய விமர்சனம் | (I) | அ. ச. ஞானசம்பந்தன் |
| (B) | இலக்கிய கலை | (II) | தொ. மு. சி. ரகுநாதன் |
| (C) | இலக்கியத் திறன் | (III) | க. கைலாசபதி |
| (D) | இலக்கியமும் திறனாய்வும் | (IV) | மு. வரதராசன் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | I | II | III |
| (2) | III | I | IV | II |
| (3) | IV | III | II | I |
| (4) | II | I | IV | III |

**42.** <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | உண்பது நாழி உடுப்பவை இரண்டே | (I) | மோசிகீரனார் |
| (B) | மன்னன் உயிர்த்தே மலர்-தலை உலகம் | (II) | குடபுலவியனார் |
| (C) | நல்லது செய்தல் ஆற்றீரா-யினும் அல்லது செய்தல் ஓம்புமின் | (III) | நக்கீரனார் |
| (D) | உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே | (IV) | நரிவெரூஉத்தலையார் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | I | II | III |
| (2) | III | I | IV | II |
| (3) | IV | III | II | I |
| (4) | II | I | IV | III |



www.examrace.com

**43.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (A) | தனிப்பாசுரத் தொகை | (I) | பட்டினத்தடிகள் |
| (B) | நறுந்தொகை | (II) | வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி |
| (C) | திருக்குறுந் தொகை | (III) | அதிவீரராம பாண்டியன் |
| (D) | திருவொற்றியூர்த் தொகை | (IV) | நாவுக்கரசர் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | II | III | IV | I |
| (2) | III | IV | I | II |
| (3) | IV | III | I | II |
| (4) | II | I | IV | III |

**44.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (A) | தென்றல் திரை | (I) | து. இரவிக்குமார் |
| (B) | நடை | (II) | கோ. வடிவேலு செட்டியார் |
| (C) | லோகோபகாரி | (III) | சி. மணி |
| (D) | நிறப்பிரிகை | (IV) | கண்ணதாசன் |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | I | II | III |
| (2) | III | I | IV | II |
| (3) | IV | III | II | I |
| (4) | II | III | IV | I |

**45.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (A) | நரைத்த கூந்தல் | (I) | பாசியின் வேர் |
| (B) | கந்தைத் துணி | (II) | கொக்கின் இறகு |
| (C) | கள் மயக்கம் | (III) | பாம்பின் தோல் |
| (D) | கலிங்க ஆடை | (IV) | தேளின் கடுப்பு |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | I | II | III |
| (2) | III | I | IV | II |
| (3) | IV | III | II | I |
| (4) | II | I | IV | III |



www.examrace.com

**(46–50)** பின்வரும் கவிதையைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் வினாக்குளுக்கு விடை தருக :

கல்விபெறும் மாணவனாம் பருவம் கண்டீர்
கவலையற்ற களிசிறந்த கால மாகும்;
தொல்லைமிக்க உலகநடைச் சூழலில் நேரும்
துன்பங்கள் துயரங்கள் தோன்றாக் காலம்;
எல்லையற்ற ஆர்வமுள்ள இக்கா லந்தான்
எக்கலையும் பயில்வதற்கு ஏற்ற காலம்
நல்வழியில் பயன்படுத்தும் மாண வர்க்கே
நாமகளின் திருவருளின் நலங்கள் கூடும்.

ஆசானைத் தந்தையென வணங்க வேண்டும்
அவர் சொல்லும் அறிவுரைக்கும் இணங்க வேண்டும்
கூசாமல் தன்கருத்தைக் கூற வேண்டும்
குற்றமுண்டேல் ஒப்பிமனம் மாற வேண்டும்
மாசான வார்த்தையெதும் ஆசான் மாட்டு
மறந்தேனும் ஒருபோதும் பேசான் என்ற
ஆசாரம் உள்ளவனே நல்ல சீடன்
அறனறிந்த நல்வாழ்விற்(கு) அருகனாவான்.

பட்சிகளின் சிறுகுஞ்சுச் சிறகில் லாமல்
பறக்கவெண்ணிக் கூட்டைவிட்டுப் பாய்வதேபோல்
சிட்சை பெற்றுக் கல்விநலம் சேர்வதற்குள்
சிறுவயதில் மாணவர்கள் சிந்திக் காமல்
கட்சிகட்டும் அரசியலின் விவகாரத்தில்
கலந்து கொள்ளக்கூடாது; கண்டிப்பாகப்
பட்சமுடன் அதைத்தடுக்கும் ஆசான் மாரைப்
பரிகசிப்போர் சிறகில்லாப் பறவைக் குஞ்சே



www.examrace.com

குருபக்தி இல்லாத காரணத்தால்
குழப்பங்கள் பள்ளிகளில் குமுறக் கண்டோம்
தருபுத்தி ஆசானைத் தாக்கிப் பேசித்
தமக்கேதோ உரிமையெனத் தருக்கிக் கொண்டு
கருமத்தைக் கல்விதனைக் கருதி டாமல்
கடமைமறந் துரிமைபுகல் கட்சி கட்டும்
சிறுபுத்தி மாணவரைச் சேர்த்து விட்டால்
சீரழியும் பள்ளிகளின் சிறந்த சேவை

ஓதலினும் மிகச்சிறந்த(து) ஒழுக்கம் என்ற
உண்மைதனை மாணவர்கள் உணர வேண்டும்.
மேதினியில் சிறப்படைந்த மேலோ ரெல்லாம்
மேன்மையுற்ற காரணம் நல்லொழுக்க மேதான்
வேதனைகள் வந்தாலும் விலகிப் போகும்
வெற்றிகளும் நல்லொழுக்கம் விரவி னோர்க்கே;
ஆதலினால் மாணவர்நல் லொழுக்கம் தன்னை
ஆருயிர்போல் கருதி அதைக் காக்க வேண்டும்.

பெற்றோர்கள் மிகப்பெரிதும் வறியரேனும்
பெற்றமகன் கல்விகற்றால் போதும் என்ற
வற்றாத ஆசையினால் வாடித் தேடி
வயிறார உண்ணாதும் வருந்திச் சேர்த்துப்
பற்றோடும் அனுப்புகின்ற பணத்தை யெல்லாம்
பட்டணத்துப் பகட்டுகளில் பாழாக் காமல்
சிற்றாசை களிற்களித்துச் சீர்கெடாமல்
சிந்தனையைக் கல்விக்கே செலுத்த வேண்டும்.

**46.** மாணவப் பருவம் என்பது

I. துன்ப, துயரங்கள் தோன்றாத காலம்

II. எக்கலையும் பயில்வதற்கு உகந்த காலம்

III. கவலையற்ற களிசிறந்த காலம்

IV. வரம்பற்ற ஆர்வமுள்ள காலம்

இவற்றுள்,

(1) I, II, III - சரி  (2) I, III, IV - சரி

(3) II, III, IV - சரி  (4) I, II, III, IV - சரி



www.examrace.com

47. **<u>உறுதிக்கூற்று</u> (உ)** : பள்ளிகளில் குழப்பங்கள் மிகுந்துள்ளன.

**<u>காரணம்</u> (கா)** : மாணவர்களிடம் குருபக்தி இல்லை.

(1) (உ) சரி; (கா) சரியன்று

(2) (உ) சரி; (கா) சரி

(3) (உ) சரியன்று; (கா) சரி

(4) (உ) சரியன்று; (கா) சரியன்று

48. யாரைப் பரிகசிப்பவர் சிறகில்லாப் பறவைக் குஞ்சு.

(1) மாணவர்களை (2) பெற்றோரை

(3) ஆசிரியர்களை (4) அரசியல்வாதிகளை

49. நல்லொழுக்கம்

I. ஓதலினும் உயர்ந்தது

II. வெற்றிதேடித் தருவது

III. வேதனைகளை விலக்குவது

IV. நாமகளின் திருவருள் வழங்குவது

இவற்றுள்,

(1) I, II, III - சரி (2) II, III, IV - சரி

(3) I, III, IV - சரி (4) I, II, III, IV - சரி

50. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (A) | ஆசான் | (I) | பகட்டு |
| (B) | சீடன் | (II) | ஆருயிர் |
| (C) | ஒழுக்கம் | (III) | ஆசாரம் |
| (D) | பட்டணம் | (IV) | தந்தை |

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| (1) | IV | I | II | III |
| (2) | IV | III | I | II |
| (3) | IV | I | III | II |
| (4) | IV | III | II | I |



www.examrace.com

**Space For Rough Work**

Exam Race



www.examrace.com